முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Education Department (NWP)

62 T I

තෙවන වාර විභාගය 2023 (2024)
மூன்றாம் தவணைப் பரீட்சை 2023 (2024)
Third Term Examination 2023 (2024)

පුරවැසි අධ්‍යාපනය I, II
குடியியற் கல்வி I, II
Civics Education I, II

11 වන ශ්‍රේණිය
தரம் 11
Grade 11

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය
மேலதிக வாசிப்பு நேரம்
Additional Reading time

මිනිත්තු යි 10
10 நிமிடம்
10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களை தெரிவு செய்வதற்கும் முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தை பயன்படுத்துக.

## குடியியற் கல்வி I

**கவனிக்க :**
1. **எல்லா வினாக்கருக்கும் விடை எழுதுக.**
2. **இலக்கம் 01 - 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.**
3. **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவிற்கும் உரிய வட்டங்களில் சரியான விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே (X) அடையாளமிடுக.**
4. **அவ்விடைத்தாளில் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றை பின்பற்றுக.**

01. சனநாயக ஆட்சி முறை இடம் ஒரு நாட்டில் அரசியல் யாப்பிற்கமைய செயற்படுவதால் கிடைக்கும் நன்மைகளில் ஒன்று.
1. சட்டத்தின் பாதுகாப்பு ஆட்சியாளருக்கு கிடைத்தல்.
2. சட்டத்தின் பாதுகாப்பு சகலருக்கும் சமமாக கிடைத்தல்.
3. ஆட்சியாளர்களின் தன்னிச்சையான செயற்பாடுகள் அதிகரித்தல்.
4. பிரசைகளின் உரிமைகள் பற்றி ஆட்சியாளர்கள் அறிந்து வைத்திருத்தல்.

02. எதிர்க் கட்சிகளின் பொறுப்புக்களில் ஒன்றாகக் கூறக்கூடியது.
1. ஆளுங்கட்சியினால் முன்னெடுக்கப்படும் எல்லா செயற்பாடுகளையும் ஏற்றுக் கொள்ளல்.
2. ஆளும் கட்சியை எந்நேரமும் விமர்சித்தல்.
3. ஆளும் கட்சியினால் முன்னெடுக்கப்படும் கொள்கை கோட்பாடுகளுக்கு ஒத்துழைப்பு நல்குதல்.
4. மிகச் சிறப்பான மாற்று ஆட்சியை அமைப்பதற்காக செயற்படல்.

03. சனநாயக சமூகத்தில் உரிமைகளை பெற்றுக் கொடுப்பதற்கான நோக்கமாக அமைவது.
1. தனிநபர் அபிவிருத்தியூடாக சமூகத்தை வளர்ச்சியடையச் செய்வதாகும்.
2. உரிமைகளுடன் கூடிய கடமைகளை வழங்குவதற்காகும்.
3. தனிநபருக்கு வாழ்வை வளப்படுத்துவதற்காகும்.
4. எல்லா பிரசைகளுக்கும் சமமான வாய்ப்பினை வழங்குவதற்காகும்.

04. மகிழ்ச்சிகரமானதும் கௌரவமான வாழ்க்கையை நோக்காகக் கொண்ட அமைப்பே அரசு எனக் கூறியவர்.
1. பேராசிரியர் கானர் 2. T.H. கிறீஸ் 3. அரிஸ்டோட்டில் 4. பிளேட்டோ

05. உள்வாரியான, வெளிவாரியான தலையீடு இன்றி பொது மக்களுக்காக பிரயோகிக்கும் அதிகாரத்தினை அழைப்பது.
1. நிறைவேற்று அதிகாரம் 2. நிர்வாக அதிகாரம்
3. இறைமை 4. அரசியல் அதிகாரம்

06. மத்திய அரசிடம் உள்ள மும்முறை அதிகாரங்களை அரசியல் யாப்பின் மூலம் பிராந்திய ஆட்சி அலகுகளிடம் ஒப்படைக்கப்படுவதை குறிப்பிடப்படுவது.
1. அதிகாரப் பகிர்வு 2. அதிகாரத்தை பகிர்ந்தளிப்பு
3. அதிகாரப் பிரிப்பு 4. மேலுள்ள விடை எதுவுமில்லை

07. இலங்கையில் மாகாண சபைக்கும் மத்திய அரசுக்கும் இடையில் இணைப்பாளராக செயற்படுபவர்.
1. முதலமைச்சர் 2. ஜனாதிபதி 3. அமைச்சர் 4. ஆளுனர்

08. மத்திய அரசுடன் 50 மாநிலங்களை கொண்டு இயங்கும் நாடு.
1. ஐக்கிய அமெரிக்கா 2. சுவிஸ்லாந்து 3. இந்தியா 4. அவுஸ்திரேலியா

09. எந்தவொரு நாட்டிலும் நியாயத்தன்மை வீழ்ச்சியடைவதற்கான காரணியாகக் கூறக் கூடியது.
1. அரச நிர்வாகம் வினைத்திறனாகச் செயற்படல்.
2. இலஞ்சம், ஊழல்கள் ஓரளவு காணப்படல்.
3. அரச சேவை அரசியல் மயமாக்கப்பட்டிருத்தல்.
4. அரச கொள்கை உருவாக்கத்திற்கு மக்கள் பங்கேற்பு காணப்படல்.

10. "ஒரு நாட்டினுள் பல்வேறு பண்பாடுகளுக்கு உரித்தானவர்கள் வாழ்வதை" நவீன தேசிய அரசு பற்றிய எண்ணக்கருவின் படி அழைப்பது.
1. ஓர் இனத்துக்கு ஓர் அரசு
2. ஒரு சமூகத்துக்கு ஓர் அரசு
3. முரண்பாடு முகாமை
4. ஒரே தேசம் பல்வேறு உணர்வு

11. பண்பாடு பற்றி வரைவிலக்கணங்கள் வழங்கிய அறிஞர்கள் அடங்கிய விடையாவது.
1. T.B. டைலர், சீலர்
2. ஹேர்மன் J பைனர், அரிஸ்டோட்டில்
3. சார்ள்ஸ் A எல்வூட்டும், J.R லெவல்
4. T.B டைலர், சாரள்ஸ் A எல்வூட்

12. உற்பத்தி செயன் முறையில் எதனை எந்தளவு உற்பத்தி செய்வது என்ற செயல்முறைக்கு அடுத்ததாக உள்ள பிரச்சினையைக் குறிப்பிடுக.
1. யாருக்காக உற்பத்தி செய்வது
2. எவ்வாறு உற்பத்தி செய்வது
3. என்ன உற்பத்தி செய்வது
4. எந்த முறையில் உற்பத்தி செய்வது

13. தனியாட்களின் தேவைகளையும், விருப்பங்களையும பூர்த்தி செய்யும் செயல்முறை எவ்வாறு அழைக்கப்படுகிறது.
1. நுகர்வுப் பொருட்கள்
2. இடைநிலைப் பொருட்கள்
3. மூலதனப் பொருட்கள்
4. முதலீட்டுப் பொருட்கள்

14. இலங்கையில் காணப்படும் சந்தைப் பொருளாதார முறையின் பண்புகளில் ஒன்று.
1. தனியார்துறை செயற்பாடு ஊக்குவிக்கப்படல்.
2. சர்வதேச வர்த்தகத் தொடர்புடைய, கட்டுப்பாடுகள் அதிகரித்தல்.
3. அரசு செலாவணி கட்டுப்பாட்டு முறையில் இணைந்து கொள்ளல்.
4. ரூபாவின் பெறுமதியினை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருத்தல்.

15. நிலையான அபிவிருத்தியின் போது கவனத்திற் கொள்ள வேண்டிய காரணி அடங்கிய விடையாவது.
1. அடிப்படை தேவைகளைப் பற்றி குறைவான கவனம் செலுத்துதல்.
2. இயற்கை வளங்களை அழித்தல்.
3. எதிர்கால சந்ததியினருடன் முரண்பட்டு இருத்தல்.
4. சமூகப் பாதுகாப்பை உறுதி செய்தல்.

16. தெற்காசிய முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கையில் (SAPTA) அங்கத்துவம் வகிக்கும் நாடு.
1. பிரான்ஸ் 2. பிரித்தானியா 3. பாகிஸ்தான் 4. கனடா

17. சர்வதேச மோதல் என்பது.
1. நபர்களுக்கிடையில் ஏற்படும் மோதல்.
2. குடும்பங்களுக்கிடையில் ஏற்படும் மோதல்.
3. நாடுகளுக்கிடையில் ஏற்படும் மோதல்.
4. தனிநபர்களுக்கிடையில் ஏற்படும் மோதல்.

18. மோதல்களை சமாதானமாக தீர்ப்பதால் ஏற்படும் பயன் அல்லாதது.
1. உயிராபத்தை தடுத்தல்.
2. இன முரண்பாடு ஏற்படல்.
3. பொருளாதார உறுதிப்பாடு
4. நாடு செழிப்படைதல்.

19. கீழே கூறப்படும் கூற்றுக்களில் 'மீட்கும் முறை' பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் அடங்கிய விடையைத் தெரிவு செய்க.
A - நிதி பற்றிய பிரச்சினை
B – குடும்ப பிரச்சினை
C – தொழிலாளர் பிரச்சினை
D – ஒழுக்காற்று நடவடிக்கை
E – சமாந்தர குழு மோதல்

1. A B C 2. B C D 3. C D E 4. A C D

20. பின்வரும் விடயங்களில் சட்டம் பற்றிய பிழையான கூற்று யாது?
1. சட்டம் பற்றிய ஒவ்வொரு தனிமனிதனும் அறிந்து வைத்திருக்க வேண்டியதில்லை.
2. இலங்கையில் அமுலாக்கத்திலிருப்பது ரோமன் டச்சு சட்டமாகும்.
3. நாட்டில் எல்லோரும் சட்டத்திற்கு கட்டுப்பட்டிருத்தல்.
4. சட்டத்துடன் இணைந்ததாகவே உரிமைகள் காணப்படுகின்றன.

21. நீதிச் சேவை ஆணைக்குழு சம்பந்தமான சரியான விடையாகக் கூறக் கூடியது.
1. நீதித்துறையின் சுதந்திரத்திற்காகவே ஏற்படுத்தப்பட்டுள்ளது.
2. ஆணைக்குழுவின் தலைவராக நீதி அமைச்சர் காணப்படுவார்.
3. பதவிக் காலம் மூன்று வருடங்களாகும்.
4. ஆணைக்குழுவின் செயற்பாட்டில் சனாதிபதிக்கு செல்வாக்குச் செலுத்த முடியும்.

22. மேல்முறையீட்டு நீதிமன்றத்திற்காகன நீதிபதிகள் நியமனம் வழங்கப்படுவது.
1. பிரதம நீதியரசர் மூலம்
2. சட்டமா அதிபர் மூலம்
3. யாப்புத்திட்ட சபையின் அனுமதியுடன் சனாதிபதி மூலம்
4. சனாதிபதியின் ஆலோசனையின் படி நீதியமைச்சர் மூலம்

23. ஒருவர் அல்லது ஒரு குழுவினரால் சமூகத்திற்கு எதிராக செய்யப்படும் குற்றம் சமபந்தமாக நடை முறைப்படுத்தப்பட்ட சட்டம்.
1. குற்றவியல் சட்டம் 2. குடியியல் சட்டம் 3. அடிப்படைச் சட்டம் 4. அரசியல் யாப்புச் சட்டம்

24. இலங்கையில் தன்னாதிக்கமும் இறைமையும் கொண்ட குடியரசாக்கப்பட்ட ஆண்டு யாது?
1. 1833 2. 1948 3. 1972 4. 1979

25. 1931ல் டொனமூர் யாப்புச் சீர்த்திருத்தம் மூலம் அரசுகழகத்தின் மொத்த உறுப்பினர்கள்.
1. 51பேர் 2. 47பேர் 3. 54பேர் 4. 61பேர்

- **பின்வரும் விடயங்களை வைத்து 26 மற்றும் 27 ம்விடைகளுக்கு விடை தருக.**

A – சட்டமியற்றுதல்
B – அரச சேவையை கட்டுப்படுத்தல்
C – வெளிநாட்டு விவகாரம்
D – மனித உரிமை பாதுகாப்பு
E – அரச நிதி நிர்வாகம்
F – நிறைவேற்றுத்துறைகள் நிர்வகித்தல்
G – பொதுமக்களின் குறைகளை முன்வைத்தல்

26. இலங்கையில் சட்டத்துறையின் பணிகள் அடங்கும் விடைத்தொகுதி.
1. A B C 2. B C E 3. C D E 4. A F G

27. இலங்கையில் நிறைவேற்றுத் துறையின் பணிகள் அடங்கிய விடைத் தொகுதி.
1. A C D 2. B C E 3. C D E 4. D E F

28. பிரதேச சபை சமபந்தமாக சரியான விடையை தெரிவு செய்க.
1. இலங்கையில் அதிகமான மக்கள் பிரதேச சபை பிரிவுக்குள்ளே வாழ்கின்றனர்.
2. இது 1978 ம் ஆண்டு 15 ம் இலக்க சட்டத்தின்படி உருவாக்கம்.
3. எல்லா பிரதேச சபைகளும் மாவட்ட எல்லையாக கொள்ளப்படும்.
4. பிரதேச சபையின் தவிசாளர் நகர பிதா ஆவார்.

29. இலங்கையில் தற்போதைய அரசியல் யாப்பின் படி அடிப்படை உரிமைகள் மீறப்படும் போது செயற்படுத்தக் கூடிய செயல்கள் பற்றி விளக்கும் வாசகம்.
1. 156 வது வாசகம 2. 162 வது வாசகம் 3. 126 வது வாசகம 4. 152 வது வாசகம்

30. சிறுவர் உரிமைகள் பாதுகாப்பதற்காக இலங்கையில் அமுல்படுத்தப்படும் செயற்பாடாக கூறக் கூடியது.
1. பிள்ளை சம்பந்தமான அதிகாரம் பொலிசாரிடம் வழங்கப்பட்டிருத்தல்.
2. பிள்ளைகளுக்கான சுதந்திரம் உச்ச அளவில் வழங்கப்பட்டிருத்தல்.
3. கல்வியை இலவசமாக வழங்குதல்.
4. எல்லா சந்தர்ப்பத்திலும் பிள்ளைகளின் நலனுக்காக செயற்படல்.

31. உலகளாவிய தொழிலாளர்களுக்கு சமூகத்தில் சிறந்த நிலையை ஏற்படுத்தும் பொருட்டு தோற்றுவிக்கப்பட்ட அமைப்பு.
1. இலங்கை தொழிலாளர் அமைப்பு.
2. சர்வதேச தொழிலாளர் சங்கம்.
3. சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு
4. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்.

32. இலங்கையில் பெண்கள் பிரகடனம் வெளியிட்ட ஆண்டு.
1. 1981ல் 2. 1993ல் 3. 1979ல் 4. 1999ல்

33. சுற்றாடல் பிரச்சினையை குறைப்பதற்காக மக்கள் செய்யக் கூடிய விடயமானது.
1. இயற்கை காடுகளை அழித்து விவசாய நடவடிக்கைகள் செய்தல்.
2. அதிகமான வளங்களை பயன்படுத்துதல்.
3. பல்வேறு கழிவுகளை முறையாக வேறுபடுத்தல்.
4. பூமியில் காணப்படும் கனிய வளங்களை கண்டுபிடிக்க முயற்சி செய்தல்.

34. அபிவிருத்தி அடைந்த நாடுகளின் பண்புகளைக் கொண்ட விடையினைத் தெரிவு செய்க.
A – நகரபுற மக்கள் அதிகம்
B – வெளிநாட்டுச் செலவானி குறைவு
C – முதலீட்டு வளங்கள் அதிகம்
D – உற்பத்தி மட்டம் குறைவு

1. A யும் C 2. C யும் D 3. A யும் D 4. A யும் D

35. அபிவிருத்தி அடைந்து வரும் நாடான இலங்கையில் காணக் கூடிய பண்புகளில் ஒன்று.
1. சிசு மரண வீதம் கீழ் மட்டத்தில் காணப்படல்.
2. ஆயுள் எதிரிர்பார்ப்பு கீழ் மட்டத்தில் காணப்படல்.
3. அரசியல் ஸ்திரத் தன்மை காணப்படல்.
4. உள்நாட்டு சேமிப்பு காணப்படல்

36. வளி மாசடைவதால் ஏற்படும் பாதிப்பு அல்லாதது.
1. மழை காலம் மாறுதல் 2. பனி மலை உருகுதல்
3. தூசுப் படை ஏற்படுதல் 4. கடல் நீர் மட்டம் உயர்தல்.

37. ஆசிய நாடுகளின் பொருளாதாரம் மற்றும் சமூக அபிவிருத்திக்கான பொருட்டு ஆசியான அமைப்பு உருவாக்கப்பட்டது. அது ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது.
1. 1981 ல் 2. 1985 ல் 3. 1967 ல் 4. 1950 ல்

38. தற்போது பலஸ்தீன் நாட்டுடன் யுத்தத்தில் ஈடுபட்டு வரும் நாடு.
1. அமெரிக்கா 2. இஸ்ரேல் 3. ருவண்டா 4. இந்தியா

39. ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பு நாடுகளைக் கொண்ட விடைத் தொகுதி.
1. சீனா, இந்தியா, பிரித்தானியா, பிரான்ஸ், ரஷ்யா
2. ஜேர்மன், பிரான்ஸ், அமெரிக்கா, இந்தியா, சீனா
3. பிரான்ஸ், பிரித்தானியா, ஜேர்மனி, அமெரிக்கா, சீனா
4. பிரான்ஸ், சீனா, பிரித்தானியா, ரஷ்யா, அமெரிக்கா

40. நாடுகளுக்கிடையே உறவுகளைச் சிறப்பாக நடத்திச் செல்வதற்குப் பிரதான ஊடகமாக திகழ்வது.
1. தூதுவர் சேவை
2. வெளிநாட்டு அமைச்சு
3. செயலகம்
4. சர்வதேச அமைப்பு

முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Education Department (NWP)

62 T II

| | | |
|---|---|---|
| තෙවන වාර විභාගය 2023 (2024)<br>மூன்றாம் தவணைப் பரீட்சை 2023 (2024)<br>Third Term Examination 2023 (2024) | පුරවැසි අධ්‍යාපනය I, II<br>குடியியற் கல்வி I, II<br>Civics Education I, II | 11 වන ශ්‍රේණිය<br>தரம் 11<br>Grade 11 |

## குடியியற் கல்வி II

- முதலாம் வினா உட்பட மேலும் நான்கு வினாக்களைத் தெரிந்து மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01. i. அரசு ஒன்றின் காணப்படும் அடிப்படை மூலக் கூறுகளின் 2 ஐக் குறிப்பிடுக?
   ii. சனாதிபதி அரசாங்க முறையின் விசேட பண்புகள் 2 தருக?
   iii. சுவிஸ்லாந்து மத்திய அரசிடம் காணப்படும் அதிகாரங்கள் 2 ஐக் குறிப்பிடுக?
   iv. நல்லாட்சியில் காணப்படக் கூடிய அடிப்படை பண்புகள் 2 வீதம் தருக?
   v. பொருளாதார முறை ஒன்றினுள் இடம்பெறும் பிரதான செயற்பாடுகளில் இரு விடயங்களை குறிப்பிடுக?
   vi. சர்வதேச மோதலின் இரு பிரிவுகளையும் பாகுபடுத்திக் காட்டுக?
   vii. சட்டத் துறையை செயற்படுத்தும் பிரதானிகள் இருவரைக் குறிப்பிடுக?
   viii. மனித உரிமைகளின் வகைகள் 2 யும் குறிப்பிடுக?
   ix. நாட்டின் அபிவிருத்தியை அளவிடுவதற்கான நோக்கங்கள் 2 தருக?
   x. பொதுநலவாய அமைப்பின் ஆரம்ப அங்கத்துவ நாடுகளில் இரண்டை எழுதுக?

(2x10= 20 புள்ளிகள்)

02. சனநாயக ஆட்சி அனைவரதும் உரிமைகளையும் பெற்றுக் கொள்ளும் ஆட்சி முறையாகும்.
   i. நேரடி சனநாயக ஆட்சி முறையினைத் தற்காலத்தில் நடைமுறைப்படுத்துவதிலுள்ள பிரச்சினைகள் 2 தருக? (02 புள்ளிகள்)
   ii. சனநாயக சமூகத்தின் இருத்தலுக்கு சுதந்திர ஊடகங்கள் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புக்கள் 3 தருக? (03 புள்ளிகள்)
   iii. a) உலகில் சிறப்பான ஆட்சியை மேற்கொள்ள ஜனநாயக ஆட்சி முறையே முக்கியமானதாக கருதப்படுகின்றது அதற்கான காரணங்கள் 3 தருக? (03 புள்ளிகள்)
   b) மேலே கூறிய காரணங்களில் ஒன்றை விளக்கி எழுதுக? (02 புள்ளிகள்)

03. மனிதர்களது தேவைகளையும், விருப்பங்களையும் நிறைவேற்றிக் கொள்வது தொடர்பில் பல்வேறு பொருட்களும், சேவைகளும் பயன்படுத்தப்படுகின்றன.
   i. மனித தேவையை நிறைவேற்றும் போது பயன்படுத்தும் பண்டங்கள் இரு வகையாகும். அவற்றினை குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
   ii. உற்பத்தி செய்யப்படும் பொருட்களை அவை பயன்படுத்தப்படுகின்ற விதத்திற்கேற்ப மூன்று பிரிவுகளாக பிரிக்கலாம். அம் மூன்று பொருட்களையும் கூறுக. (03 புள்ளிகள்)
   iii. a) உலகின் பொருளாதாரத்தினை அடிப்படையாக வைத்து பின்பற்றப்படுகின்ற பொருளாதார முறை 2 தருக? (02 புள்ளிகள்)
   b) பொருளாதார முறைகளில் ஒன்றை விளக்கி எழுதுக? (03 புள்ளிகள்)

(6) WWW.PastPapers.WiKi (5)

Download Term Test Papers, Short Notes From One Place!

04. அரசு ஒன்றின் உயர் சட்ட மூலமாக அமைவது அரசியல் யாப்பாகும்.

i. சட்ட ஆட்சியின் நடைமுறைப் பண்புகள் 2 தருக? (02 புள்ளிகள்)

ii. இலங்கையில் செயற்படும் விசேட சட்டங்கள் 3 ஐ குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

iii. a) இலங்கையில் செயற்படும் நீதிமன்றங்களில் 2 இனை எழுதுக? (02 புள்ளிகள்)

b) மேலே குறிப்பிட்ட நீதிமன்றங்களில் ஒன்றினை சுருக்கமாக எழுதுக? (03 புள்ளிகள்)

05. மனிதன் வாழ்வதற்கும் தனது கௌரவத்தைப் பாதுகாக்கவும் மனித உரிமைகள் அத்தியாவசியமாகின்றது.

i. உலகில் அதிகமான மனிதர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டமைக்கான சந்தர்ப்பங்கள் 2 ஐக் குறிப்பிடுக? (02 புள்ளிகள்)

ii. ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்தில் அடங்கியுள்ள விடயங்கள் 3 ஐக் எழுதுக? (03 புள்ளிகள்)

iii. a) உரிமைகளுடன் கூடிய பிரசைகளின் கடமைகள் 2ஐக் பாகுபடுத்துக? (02 புள்ளிகள்)

b) மேலே a ல் குறிப்பிட்ட கடமைகளில் ஒன்றை தெளிவு படுத்தி எழுதுக? (03 புள்ளிகள்)

06. சூழல் என்பது உயிர்களின் இருப்பில் பாதிப்புச் செலுத்தும் வெளிவாரி நிலைமைகளின் தொகுப்பாகும்.

i. சூழல் தொகுதியில் காணப்படும் உயிர் கூறுகளில் அடங்கியுள்ள விடயங்கள் 2 தருக? (02 புள்ளிகள்)

ii. மனித செயற்பாடுகள் காரணமாக சூழல் சிக்கலடைந்துள்ளதுடன் சமூகச் சூழலும் பாதிப்பு அடைந்துள்ளது. அப் பாதிப்புக்கள் 3 இனைக் குறிப்பிடுக? (03 புள்ளிகள்)

iii. a) சூழல் தொடர்பான பிரசைகளின் பொறுப்புக்களும், கடமைகளும் 2 னை குறிப்பிடுக? (02 புள்ளிகள்)

b) அதில் ஒன்றை விளக்கி எழுதுக? (03 புள்ளிகள்)

07. சர்வதேச உறவுகள் என்பது நாடுகளுக்கிடையே இடம்பெறும் அனைத்துவிதமான உறவுகளுமாகும்.

i. ஐக்கிய நாடுகள் சபையின் நோக்கங்கள் 2 னை எழுதுக? (02 புள்ளிகள்)

ii. சர்வதேச உறவுகள் வளர்ச்சியடைவதில் தாக்கம் செலுத்திய காரணிகளில் மூன்றினைக் குறிப்பிடுக? (03 புள்ளிகள்)

iii. a) இலங்கை மீது சர்வதேச உறவுகள் செல்வாக்கு செலுத்தும் துறைகள் 3 தருக? (03 புள்ளிகள்)

b) அதில் ஒன்றைப் பற்றி தெளிவுபடுத்துக? (02 புள்ளிகள்)

PAST PAPERS WIKI


Download Term Test Papers, Short Notes From One Place!

முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Education Department (NWP)

62 T I,II

තෙවන වාර විභාගය 2023 (2024)
மூன்றாம் தவணைப் பரீட்சை 2023 (2024)
Third Term Examination 2023 (2024)

පුරවැසි අධ්‍යාපනය I, II
குடியியற் கல்வி I, II
Civics Education I, II

11 වන ශ්‍රේණිය
தரம் 11
Grade 11

## விடைப்பத்திரம்

### பகுதி I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | 2 | 11. | 4 | 21. | 1 | 31. | 2 |
| 2. | 4 | 12. | 2 | 22. | 3 | 32. | 2 |
| 3. | 4 | 13. | 1 | 23. | 2 | 33. | 3 |
| 4. | 3 | 14. | 1 | 24. | 3 | 34. | 1 |
| 5. | 3 | 15. | 4 | 25. | 4 | 35. | 1 |
| 6. | 2 | 16. | 3 | 26. | 4 | 36. | 1 |
| 7. | 4 | 17. | 3 | 27. | 2 | 37. | 3 |
| 8. | 1 | 18. | 2 | 28. | 1 | 38. | 2 |
| 9. | 3 | 19. | 4 | 29. | 3 | 39. | 4 |
| 10. | 2 | 20. | 1 | 30. | 4 | 40. | 1 |

### பகுதி II

01. i. நிலம், மக்கள் தொகை, அரசாங்கம், இறைமை

ii. நிறைவேற்று அதிகாரத்தை செயற்படுத்துபவர் சனாதிபதியாவார்,
அரச தலைவரும், அரசாங்கத்தின் தலைவரும் சனாதிபதியாவார்.

iii. வெளிவிவகாரம், பாதுகாப்பு இராணுவ நடவடிக்கை, வெளிநாடுகளுடன் ஒப்பந்தங்கள் செய்தல்.

iv. ஊழல்களற்ற, முறைகேடுகளற்ற ஆட்சியும் நிரிவாகமும், சுகந்திரமும், சமூகநீதியும் நிலைநாட்டப்படல்.

v. உற்பத்தி, விநியோகம், நுகர்வு

vi. கொள்கை ரீதியான மோதல், பொருளாதார ரீதியான மோதல்

vii. நீதி அமைச்சர், பிரதமநீயரசர், சட்டமா அதிபர்

viii. குடியியல், அரசியல் உரிமைகள்
சமூக, பொருளாதார காலாசார உரிமைகள்

xi. நாட்டின் பிரச்சினைக்கான தீர்வினை தேடல்.
பொருளாதார கொள்கை வகுக்க, நாடுகளுடன் ஒப்பிடல்.

x. பெரிய பிரிதானியா, அவுஸ்ரேலியா, தென்ஆபிரிக்கா, கனடா

(2) WWW.PastPapers.WiKi (1)



Download Term Test Papers, Short Notes From One Place!

02. i. தற்கால அரசுகளின் நிலப்பரப்பு விசாலமாக காணப்படுதல்.
அரசு அதிக சனத்தொகையை கொண்டிருத்தல்.

ii. உண்மையாலும் சரியானதுமான தகவல்கள் வழங்குதல்.
பக்கச் சார்பற்றதும், சமூக நன்மை பயக்கக் கூடியதுமான தகவல்கள்.
மக்களின் அறிவு வளர்ச்சிக்கு உதவுதல்.
ஆட்சியாளர்களை சரியான வழியில் இட்டுச் செல்லுதல்.

iii. a) சமமான உரிமைகள் கிடைக்கப் பெறுதல்.
தனிநபர் இயலுமைக்கும், திறமைக்கும் ஏற்ற சந்தர்ப்பம் காணப்படல்.
பிரசைகளுக்கு ஆட்சியில் பங்கு கொள்ள சந்தர்ப்பம் கிடைத்தல்.

03. i. பொருளாதாரப் பண்டம், பொருளாதார மல்லாத பண்டம்.

ii. நுகர்வுப் பொருள், இடைநிலைப் பொருள், மூலதனப் பொருள்

iii. a) முதலாளித்துவம், சமதர்மம், கலப்பு பொருளாதாரம்.

04. i. சட்டத்தை மதித்தல், அடிபணிதல்
நடைமுறையிலிருக்கும் சட்டத்துக்கு இனங்க குற்றவாளியை தண்டித்தல்.
சுயாதீன நீதிமன்றம் காணப்படல்.

ii. கண்டியச் சட்டம், தேசவழமைச்சட்டம், முஸ்லீம் சட்டம்

iii. a) உயர்நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம்

05. i. முதலாம் மகா யுத்தம், 2ம் உலக மகா யுத்தம்.

ii. சிறுவர் பாதுகாப்பு, பங்கு கொள்ளல், விருத்தி, உயிர் வாழ்தல்

iii. a) சட்டரீதியான கடமைகள், பண்பாட்டு ரீதியான கடமைகள்

06. i. உயிரினங்கள், தாவரங்கள், நீர் வாழ் உயிரினங்கள்

ii. சமூக தொடர்புகள் சீர்குலைதல்
சமூக அநீதி ஏற்படல்
குடும்ப அமைப்பு சீர்குலைதல்

iii. a) வளங்களை சிக்கனமாக பயன்படுத்தல், கழிவுப் பொருட்களை மீள்சுழற்சிக்கு உட்படுத்தல், சுற்றாடல் சட்ட திட்டத்துக்கு ஏற்ப செயற்படுதல்.

07. i. உலக சமாதானம் / பாதுகாப்பு முன்னெடுத்தல், இன நட்புறவு ஏற்படுத்தல்.

ii. போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் விருத்தி.
மேலதிக உற்பத்திகளை விற்பனை செய்தல்.
நவீன தொழினுட்பத் திறனை பெற்றுக் கொள்ளுதல்.

iii. a) சர்வதேச வர்த்தகம், கடன் மற்றும் நிவாரணம், பாதுகாப்புதுறை, வேலை வாய்ப்பு

PAST PAPERS WIKI



(2) WWW.PastPapers.WiKi (2)
Download Term Test Papers, Short Notes From One Place!



LOL.lk
BookStore
විභාග ඉලක්ක
පහසුවෙන් ජයගන්න
ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න
| කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් | සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර
| A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත්
| School Book | ගුරු අත්පොත්
pesuru Prakashana Private Ltd.
Akura Pilot
සමනල දැනුම
සතර
පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට
www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න